மாண்புமிகு டாக்டர் திரு. மு. கருணாநிதி : எஸ். பி. ஸி. ஏ. கால் நடைகளுக்குத் துன்பம் ஏற்படாதவாறு அதற்கேற்ற நடவடிக்கை களைத்தான் எடுத்து வருகிறது. இதுபோன்ற கால்நடைகளைப் பராமரிக்கவும் அவர்கள் யோசித்தால் அரசு அதற்கு ஆதரவு தர முன்வரும்.

Book Presentation Scheme

* 37 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the United Kingdom Government has gifted books under the "Book Presentation Scheme" during September 1971 to the State Government; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தென் பிராந்திய மாநிலங்களிலுள்ள நாற்பது பல்துறைத் தொழில்நுட்பப் பள்ளிகளுக்கு இங்கிலாந்து அரசு நாற்பது அடுக்குப் புத்தகங்களை இலவசமாக வழங்கியுள்ளது. தமிழ் நாட்டில் 11 பல்துறைத் தொழில்நுட்பப் பள்ளிகள் (அரசினர் பள்ளிகள் 3, மானியம் பெறும் பள்ளிகள் 8) இந்த அன்பளிப்பை பெற்றன.

THIRU N. DENNIS : Sir, may I know whether any other country has gifted books under this scheme?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டில் இங்கிலாந்து அரசிடம் இருந்து மட்டும் தொழில்நுட்பப் பள்ளி களுக்கான புத்தக அடுக்குகள் வந்தன. இதுபோல வேறு நாடுகளில் இருந்தும் புத்தகங்கள் வந்திருக்கின்றனவா என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

Development of Madras City

* 38 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the United Nations assignee to the Delhi School of Architecture, has been invited to advice the State Government for recommending improvements to Madras City.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

THIRU N. DENNIS : Sir, may I know whether any remuneration is given to him?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை யினுடைய இயற்கை அமைப்பை எழில் பொருந்தியதாக ஆக்கு வதற்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர் களுடைய தலைமையின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது. போர்டு ஸ்தாபனத்தின் சார்பாக திரு. டேவின்ஸ் கின்னர் என்பவர் 13—10—1971 அன்று சென்னைக்கு வந்தபோது இதுபற்றி அவரும்

1972 சனவரி 25]

ஆராய்ந்து சில யோசனைகளை இந்தக் குழுவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்தக் குழுவினர் பரிசிலித்து வருகிறார்கள். அதற்காக அவருக்கு ரெம்யூனரேஷன் ஏதாவது கொடுக்கப்பட்டதா என்கிற விவரம் குறிப்பில் இல்லை.

பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள்

* 39 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் பணியாற்றும் பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 2,206 பேர்.

(இ) இது அரசின் பரிசிலனையில் உள்ளது.

சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகள்

* 40 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

படிப்பிற்கிடையே தொழிற்பயிற்சி போதிக்கும் முறை

* 41 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள என்ஜினியரிங் கல்லூரிகளிலும் "சாண்ட்விச் படிப்பு முறை" (படிப்புக்கு இடையே தொழிற் பயிற்சி போதிக்கும் முறை) ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1972-73-ல் ஒன்று அல்லது இரண்டு பொறியியல் கல்லூரிகளில் இப்பயிற்சி ஆரம்பிக்கப்படலாம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த சாண்ட்விச் படிப்பு முறையின்படி எத்தனை மணி நேரம் படிப்பு, எத்தனை மணி நேரம் தொழில் பயிற்சி அளிக்கிற திட்டம் இருக்கிறது ? தொழிற்